உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 23.05.2026 • மலர் 04 • இதழ்: 143 • Edition : Nagercoil • 23.05.2026 • Vol : 04 • Issue : 143 • Page : 4 • Rs. 5/-

# உங்களை சந்திக்க சாய் வாலா வந்துள்ளேன்

## ரோம் விழாவில் பிரதமர் மோடி பேச்சு

ரோம், மே. 23

இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெற்ற விழாவில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "உங்களை சந்திக்க 'சாய் வாலா' வந்துள்ளேன்" என்று தெரிவித்தார். அப்போது அவையில் சிரிப்பலை எழுந்தது.

ஐ.நா. சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தலைமை அலுவலகம் ரோமில் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது அவர் பேசும் போது, "மே 21ம் தேதி சர்வதேச தேநீர் தினம் கொண்டாடப்படுகிறது.

இதற்கு ஒரு நாள் முன்னதாக உங்களை சந்திக்க 'சாய் வாலா' வந்துள்ளேன் . இந்தியாவில் பல்வேறு வகையான தேநீர் உள்ளன. எங்களது தேநீர் சுவை, மணம், திடம் நிறைந்தது" என்று தெரிவித்தார்.

'சாய் வாலா' வந்துள்ளேன் என்று பிரதமர் மோடி கூறிய போது அவையில் சிரிப்பலை எழுந்தது.இந்தவீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடி சில நாட்களுக்கு முன்பு நெதர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

குறிப்பாக நெதர்லாந்தின் ஏஎஸ்எம்எல் நிறுவனம், டாடா எலெக்ட்ரானிக்ஸ் இணைந்து குஜராத்தில் புதிய செமிகண்டக்டர் ஆலையை அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

குஜராத்தில் தயாரிக்கப்பட உள்ள செமிகண்டக்டர்களைமொபைல் போன், கார்களில் பயன்படுத்த முடியும். சுவீடன் நாட்டில் பிரதமர் மோடி சுற்றுப்பயணம் செய்தபோது அந்த நாட்டுடன் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப் படும். இரு நாடுகள் இடையிலான வர்த்தகம் அடுத்த 5 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரிக்கப் படும் என்று சுவீடன் பிரதமர் உல்ப் கிறிஸ்டர்சன் உறுதி அளித்துள்ளார்.

நார்வே நாட்டில் பிரதமர் மோடி பயணம் மேற்கொண்ட போது



12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக இந்தியாவின் சூரிய சக்தி, காற்றாலை, நீர் மின் சக்தி, அணு சக்தி உற்பத்தி துறைகளில் முதலீடு செய்ய நார்வே உறுதி அளித்துள்ளது.

மேலும் இந்தியாவுக்கு கூடுதலாக எல்பிஜி காஸை விநியோகிக்க நார்வே உறுதி அளித்திருக்கிறது. இத்தாலியில் பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப் பயணம் செய்தபோது, இந்தியா மத்திய கிழக்கு ஐரோப்பா வழித்தட திட்டத்தை (ஐஎம்இசி) நிறைவேற்ற இரு நாடுகளும் உறுதி பூண்டன.

இந்த ஒப்பந்தம் இந்தியா, வளைகுடா நாடுகள், ஐரோப்பிய நாடுகள் இடையிலான வர்த்தகத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

கைகோக்கும் ஐரோப்பா பிரதமர் மோடியின் ஐரோப்பிய நாடுகள் பயணம் குறித்து யூரோ நியூஸ் ஊடகம் வெளியிட்ட செய்தியில், "ஐரோப்பாவின் மிக நெருங்கிய நட்பு நாடுகள் (அமெரிக்கா) எங்களை விட்டு விலகிச் செல்கின்றன.

இந்த நேரத்தில் இந்தியா உடனான நட்புறவு மிகுந்த முக்கியத்துவம் பெற்று உள்ளது. சர்வதேச அரங்கில் இந்தியாவின் செல்வாக்கு தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், பாதுகாப்பு, வர்த்தகம்சார்ந்த துறைகளில் இந்தியாவுடன் கைகோத்து செயல்பட ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்துள்ளன" என கூறப்பட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்துறை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டம்- பரபரப்பு

நாகர்கோவில், மே.23

குமரி மாவட்ட ஆட்சியர் 4 மாதமாக தகுதியான நபர்கள் இருந்தும் காலியாக உள்ள துணை தாசில்தார் பணியிடங்களை தற்காலிக துணை தாசில்தார் பதவி உயர்வு வழங்கி நிரப்பாமல் காலம் தாழ்த்தி வருவதாக புகார் உள்ளது. உடனடியாக பணியிடம் நிரப்ப வேண்டும். மாவட்ட நிர்வாகிகளை பழிவாங்கும் நோக்கில் வேண்டுமேன்றே இடம் மாற்றம் செய்ததை உடனே ரத்து செய்ய வேண்டும். தாலுகாக்களில் பணிபுரியும் தாசில்தார்களை ஓராண்டு காலம் பணி நிறைவு செய்யாமல் பணியிட மாற்றம் செய்ததை ரத்து செய்ய வேண்டும்என்பனபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி,

பணிகளை புறங்கணித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் அலுவலக அறை முன்பு தமிழ்நாடு வருவாய்த்துறை ஊழியர் சங்கம் சார்பில் குமரி மாவட்ட கிளை சார்பில் பணி புறக்கணிப்பு உள்ளிருப்பு போராட்டத்தில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.



ஏற்கனவே கடந்த சில மாதங்களுக்கு முன் கிராம நிர்வாக அலுவலர்களை மோசமாக பேசியதாகவும் மன உளைச்சல் ஏற்படும் அளவில் மோசமாக பேசி தற்கொலைக்கு தூண்டும் விதத்தில் பேசியதாகவும் கூறி அப்போதும் அலுவலர்கள் ஆட்சியர் அலுவலகம் அறைக்கு முன் அமர்ந்து உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதும் கோஷம் எழுப்பியதும் அதன் பின்னர் மாவட்ட ஆட்சியர் அழகு மீனா மன்னிப்பு கேட்டதும் மன்னிப்புகேட்டதால்போராட்டத்தை விலக்கிக் கொண்டதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

குறிப்பாக பொதுமக்கள் ஒவ்வொருதிங்கள்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கும் புகார் மனுக்கள் மாதம் ஒருமுறை நடைபெறும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கொடுக்கப்படும் புகார் மனுக்கள்

ஆகியவற்றுக்கு கூட எந்த தீர்வும் கிடைக்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் தொடர்ந்து இருந்து வருகிறது.

தற்போது புதிய அரசு பொறுப்பேற்று உள்ள நிலையில் அரசு ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## குமரியில் சர்வதேச பல்லுயிர் பெருக்க தின கொண்டாட்டம்: வனத்துறை சார்பில் நடந்தது

நாகர்கோவில், மே.23

கன்னியாகுமரி மாவட்ட வனவிலங்கு சரணாலயம், மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் முனைவர். அன்பு உத்தரவின் பேரில் பூதப்பாண்டி வனச்சரக அலுவலர் ந.அன்பழகன் தலைமையில் சர்வதேச பல்லுயிர் பெருக்க தினம் நேற்று கொண்டாடப்பட்டது.



இதையொட்டி உதவி வேளாண்மை அலுவலர் டி.அனந்தபத்மநாபன், உள்ளாட்சித் துறை அலுவலர்களுடன் இணைந்து சமத்துவபுரத்தில் விவசாய பெருமக்கள், தன்னார்வலர்கள் பங்களிப்பில் பல்லுயிர் பெருக்கம் விழிப்புணர்வு மற்றும் மரக்கன்றுகள் நடப்படும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்ச்சியில் பூமியின் சமநிலைக்கும் மனிதகுலத்தின் தொடர்ச்சியான வாழ்விற்கும் பல்லுயிர் பெருக்கம் இன்றியமையாதது. எனவே அன்றாட வாழ்க்கையில் தாவரங்கள், விலங்குகள் மற்றும் இயற்கையின் சமநிலைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் செயல்படுவேண்டும். இயற்கையை நேசித்து மரங்களை வளர்க்க வேண்டும்.

பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்த்து, நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும். பூமியின் பல்லுயிர் வளத்தைக் காப்பது நமது தலையாய கடமை என்பதை உணர்ந்து, எதிர்கால சந்ததியினருக்காக பசுமையான மற்றும் வளமான உலகத்தை உருவாக்க முழுமையாகப் பாடுபடவேண்டும் என வனச்சரக அலுவலர் அன்பழகன் விளக்கிகூறினார். முடிவில் 'இயற்கையையும் உயிரினங்களின் சமநிலையையும் பாதுகாப்போம்' என உறுதிமொழி எடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆரல்வாய்மொழி பிரிவு வனவர் மணிகண்டன், வனக்காப்பாளர்கள் தீபா, ஆஷிகா சபுராள், முத்துக்குமார் வனக்காவலர்கள் சிவா, பிரவீன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அறிக்கை

## தருமபுரி புதிய பேருந்து நிலைய ஊழல் பற்றி உயர்மட்ட விசாரணை தேவை: உள்மாவட்ட பேருந்துகளை பழைய நிலையத்திலிருந்து இயக்க வேண்டும்

தருமபுரி, மே. 23

தருமபுரியில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு பயனளிக்கும் வகையில், நகருக்கு வெளியே கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து பேருந்துகளும் இயக்கப்படுவதால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து நகருக்கு வந்து செல்லும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பல முறை கோரிக்கை விடுத்தும் மக்களின் உணர்வுகளை மதிக்காமல், பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை இயக்க மறுத்து, தனியார் நிறுவனத்திற்கு சாதகமாக மாவட்ட நிர்வாகம் செயல்படுவது கண்டிக்கத்தக்கது.

தருமபுரி பேருந்து நிலையம் நகரின் மையப்பகுதியில் 1978&ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. இந்தப் பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியில் இருந்து நகரப் பேருந்துகளும், இன்னொரு பகுதியிலிருந்து புறநகர் மற்றும் நீண்ட தொலைவு பேருந்துகளும் இயக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில், முந்தைய திமுக ஆட்சியில், தருமபுரிக்கு கூடுதல் பேருந்து நிலையம் கட்டுவதற்கான தீர்மானம் நகராட்சியில் நிறைவேற்றப்பட்டு, பென்னாகரம் சாலையில் உள்ள ஏ. ரெட்டிஅள்ளி கிராமத்தில் தனியார் நிறுவனத்தால் கொடையாக வழங்கப்பட்ட 10 ஏக்கர் நிலத்தில், ரூ.39.14 கோடியில் தனியார் பங்களிப்புடன் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டது. திமுக ஆட்சியின் கடைசி கட்டத்தில் கடந்த பிப்ரவரி 8&ஆம் நாள் எந்த முன்னறிவிப்பும் இன்றி அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலி மூலம் திறந்து வைக்கப்பட்டது. அன்று இரவிலிருந்தே அனைத்து பேருந்துகளின் இயக்கமும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

தருமபுரியிலிருந்து 5 கி.மீ தொலைவில் ஏ. ரெட்டி அள்ளி கிராமத்திற்கு கட்டப்பட்டது கூடுதல் பேருந்து நிலையம் தான் என்பதால் பழைய பேருந்து நிலையம் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப் பட்டிருக்க வேண்டும்; வேண்டுமானால், புதிய பேருந்து நிலையத்திலிருந்து வெளிமாவட்ட மற்றும் தொலைதூர பேருந்துகளை மட்டும் இயக்கியிருக்கலாம். ஆனால், அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றப் பட்டதால் வெளியூர்களில் இருந்து தருமபுரிக்கு வந்து செல்லும் மக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களும் நகரப் பகுதிக்குள் தான் உள்ளன. நகரத்திற்குள் உள்ள கடைகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்களில் ஆயிரக்கணக்கானோர் பணி செய்கின்றனர். பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளும் நகருக்குள் இருப்பதால் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்வது வழக்கம். ஆனால், இவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாமல் 5 கி.மீக்கு அப்பால் பேருந்து நிலையம் மாற்றப்பட்டதால், தருமபுரி நகருக்கு வரும் ஒவ்வொருவரும் பல கி.மீ கூடுதலாக பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால், தேவையற்ற தாமதமும், கூடுதல் செலவும் ஏற்படுகின்றன. புதிய பேருந்து நிலையத்திலிருந்து நகருக்குள் செல்ல ஒவ்வொருவரும் ரூ.20 முதல் ரூ.100 வரை செலவழிக்க வேண்டியுள்ளது. மேலும், பழைய பேருந்து நிலையம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் செயல்பட்டு வந்தகடைகள்வணிகத்தை முற்றிலுமாக இழந்துள்ளன. இதனால், வணிகர்களும், தொழிலாளர்களும்



வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

தருமபுரி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுவதால் மக்களுக்குஏற்படும்பாதிப்புகள் குறித்து கடந்த ஆட்சியின்பேரவைக்கூட்டத்தில் அப்போதைய தருமபுரி சட்டமன்ற உறுப்பினர்வெங்கடேஸ்வரன் வினா எழுப்பினர். அதற்கு பதிலளித்த அப்போதைய நகராட்சி நிர்வாகத் துறை கே.என். நேரு, தருமபுரி பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். ஆனால், அமைச்சர் வாக்குறுதி அளித்தும் கூட அதன் மீது மாவட்ட நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனினும், மாவட்ட நிர்வாகத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் அளிக்கப்பட்ட அழுத்தத்தைத் தொடர்ந்து அரூர், பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு வந்தன. ஆனால், கடந்த சில நாள்களுக்கு முன் அவையும் புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டு விட்டன. இதனால், தருமபுரி பழைய பேருந்து நிலையத்தின் செயல்பாடுகள் முற்றிலுமாக முடக்கப்பட்டு, அது சாதாரணமான பேருந்து நிறுத்தமாக மாற்றப்பட்டு விட்டது.

பழைய பேருந்து நிலையத்தின் மூலம் ஆண்டுக்கு ரூ.5.5 கோடி வருவாய் கிடைத்து வந்த நிலையில், புதிய பேருந்து நிலையத்தை கட்டி நடத்தும் தனியார் நிறுவனம் ஆண்டுக்கு ரூ.55 லட்சம் மட்டும் செலுத்தினால் போதும் என அரசு சலுகை அளித்துள்ளது. இந்த வகையில் மட்டும் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.5 கோடி அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இது கூடுதல் ஊழல் ஆகும்.

தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானநிலத்தின்மதிப்பை அதிகரிக்கச் செய்வதற்காக அந்த நிறுவனத்துடன், முந்தைய ஆட்சியின் அமைச்சர்களும், அதிகாரிகளும் கூட்டுச் சதி செய்திருப்பதை அனுமதிக்க முடியாது. தருமபுரியில் மட்டுமின்றி, இராசிபுரம், ரிஷிவந்தியம், கும்பகோணம் உள்ளிட்ட பல நகரங்களில் புதிய பேருந்து நிலையங்களை அமைப்பதில் இதேபோல் ஊழல் நடந்திருப்பதாக கூறப்படுகிறது. அந்த நகரங்களிலும் திமுக நிர்வாகிகள், அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு சொந்தமான நிலங்களின் மதிப்பை உயர்த்தும் நோக்குடன் அவற்றுக்கு அருகிலேயே பேருந்து நிலையம் அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டு வருகிறது. இந்த வகையில் மட்டும் திமுகவினருக்கு சொந்தமான நிலங்களின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. மக்களின் நலன்களைப் பற்றி எந்தக் கவலையும் படாமல், தங்களின் சொத்து மதிப்பை உயர்த்தும் வகையில் தான் முந்தைய ஆட்சியாளர்கள் ஊழல் செய்துள்ளனர்.

இவ்வாறாக முந்தைய திமுக ஆட்சியில் தருமபுரி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் விஷயத்திலும்,, அதே போல் தமிழ்நாட்டின் பல நகரங்களில் பேருந்து நிலையம் அமைப்பதிலும் நடைபெற்ற கூட்டுச் சதி மற்றும் ஊழல் குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்து உயர்நிலை விசாரணை நடத்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் விஜய் அவர்கள் ஆணையிட வேண்டும்.

அதுமட்டுமின்றி, தருமபுரி மாவட்ட மக்களின் நலன் கருதி, தருமபுரி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் செல்லும் பேருந்துகளை தருமபுரி பழைய பேருந்து நிலையத்திலிருந்து இயக்க ஆணையிட வேண்டும். இதை செய்யத் தவறினால் மக்களைத் திரட்டி தொடர் போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும்.

தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

### தருமபுரி மாவட்டத்தில்

# பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 93.94 சதவீத மாணவர்கள் தேர்ச்சி

தருமபுரி மே 23

தருமபுரியில் பத்தாம் வகுப்பு அரசு பொது தேர்வு முடிவுகளை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா வெளியிட்டார். தருமபுரி மாவட்டத்தில் அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் என மொத்தம் 317 பள்ளிகளைச் சேர்ந்த 10, 895 மாணவர்கள், 9,584 மாணவிகள் என மொத்தம் 19,919 பேர் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை எழுதினார்கள். இவர்களில் 9,4 77 மாணவர்கள், 9,284 மாணவிகள் என மொத்தம் 18, 711 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் மாணவ ,மாணவிகளின் தேர்ச்சி 93.94% ஆகும். மாவட்டத்தில் கலந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாணவ, மாணவிகளின் தேர்ச்சி 96.31% இருந்தது. கடந்த ஆண்டு ஒப்பிடும் போது இந்தாண்டு தேர்ச்சி விகிதம் 2. 37% குறைந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியவர்களில் 91.7% மாணவர்களும், 96.35% மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களை விட மாணவிகள் 4.65 சதவீதம் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளனர். தருமபுரி மாவட்டம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி சதவீதத்தில் அடிப்படையில் கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் 9 வந்து இடத்தை பிடித்திருந்தது .இந்த ஆண்டு தேர்ச்சி சதவிகித குறைந்துள்ளதால் மாநில அளவில் 23 வது இடத்தை பிடித்துள்ளது.

### ராஜீவ் காந்தி நினைவு தினத்தையொட்டி

# திருப்பூரில் காங்கிரஸ் கட்சியினர் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு



திருப்பூர், மே. 23

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் 35ஆவது நினைவு தினத்தையொட்டி திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பாக நினைவஞ்சலி மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

மாநகர் மாவட்டத் தலைவர் நல்லூர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் திருவுருவப் படம் தாங்கிய வாகன ஊர்தி நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வலத்தின் போது, தொண்டர்கள் ராஜீவ் காந்தியின் புகழைப் போற்றியும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் முழக்கங்களை எழுப்பினர். தொடர்ந்து, அவரது சாதனை விளக்க நோட்டீஸ்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்ப ட்டன.

நிகழ்வின் முக்கியப் பகுதியாக, கலந்து கொண்ட அனைவரும் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில், காங்கிரஸ் நிர்வாகி என். ராமகிருஷ்ணன் நன்றியுரை ஆற்றினார். இதில் திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# பெரியநாயக்கன்பாளையம் கோவனூர் இடையே புதிய மினிபஸ் சேவை துவக்கம்



கோவை மே :23

கோவை மாவட்டம் கூடலூர் நகராட்சிக் குட்பட்ட பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில், புதிய மினிபஸ் (சிற்றுந்து) சேவை இன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது. கென்னடி குடும்பத்தாரின் சார்பில், பெரியநாயக்கன்பாளையம் முதல் கோவனூர் வரை இயக்கப்படும்

இந்த சிற்றுந்து சேவையை, கென்னடி தென்றல் அவென்யூ பகுதியில் நகர் மன்ற தலைவர் அ.அறிவரசு பொதுமக்களோடு இணைந்து கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த புதிய பேருந்து வசதி, இப்பகுதி மக்களின் தினசரி பயணத்தை எளிதாக்குவதுடன், நகராட்சிக்குட்பட்ட கிராமப்புற இணைப்பையும் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துவக்க விழாவில் உள்ளூர் மக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலர் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் செல்வநம்பி, அண்ணாதுரை, இளைஞரணி உதயகுமார், நகர் மன்ற உறுப்பினர்கள் முருகானந்தம், நந்தினி, ஜல்லிமேடு புதூர் குணசேகரன், ஆர். வி.நகர் ரமேஷ், முன்னாள் கவுன்சிலர் சீனிவாசன், ஐயப்பன், ஞானம், சிடிசி முருகன், மருதாச்சலம் உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். கூடலூர் நகராட்சிப் பகுதியில் போக்குவரத்துவசதிகள்குறைவாகஇருந்த இடங்களை இணைக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மினிபஸ் சேவை, பொதுமக்களுக்கு பெரும் பயனளிக்கும் என விழாவில் பங்கேற்றவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# விபத்தில் மூளைச்சாவு அடைந்த அரூர் வாலிபரின் உடல் உறுப்புக்கள் தானம்

## சேலத்தில் இருந்து சென்னைக்கு விமானத்தை கொண்டு செல்லப்பட்டது.

தருமபுரி மே 23

தருமபுரி மாவட்டம் அரூர் அருகே கீரைப்பட்டி அடுத்த கௌாப்பாறை பகுதியைச் சேர்ந்தவர் பழனி இவரது மகன் சந்தோஷ் குமார் (வயது 23) பட்டதாரியான இவர் தனது தந்தை செய்து வரும் தொழிலுக்கு உதவியாக இருந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 17 ம் தேதி அவர் கோவையிலிருந்து தருமபுரிக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். ஈரோடு மாவட்டம் சித்தோடு அருகே வந்த போது எதிர்பாராத விதமாக சந்தோஷ்குமார் நிலைத்தடுமாறி கீழே விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி சந்தோஷ் குமார் மூளைச்சாவு அடைந்தார். இதைத் தொடர்ந்து வாலிபரின் குடும்பத்தினர் சம்மதத்துடன் உடல் உறுப்புக்கள் தானம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதை அடுத்து சந்தோஷ் குமாரின் இதயம், சிறு குடலும் உரிய பாதுகாப்பு சாதனங்களில் வைக்கப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் மின்னல் வேகத்தில் சேலம் விமான நிலையத்திற்கு 3 மணிக்கு கொ ண்டு வரப்பட்டது. அங்கிருந்து பயணிகள் விமானம் மூலம் சென்னைக்கு விரைந்த இதயம் ரீலா மருத்துவமனைக்கும், சிறுகுடல் எம் ஜி எம் மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். தனது உயிரை விட்டு மேலும் இரண்டு பேருக்கு மறுவாழ்வு கொடுத்து விட்டு சென்றுள்ளதாக வாலிபர் சந்தேஷ்குமாரின் உறவினர்கள் சோகம் கலந்த நெகிழ்ச்சியுடன் கூறினர் . மரணத்திலும் மனித நேயத்துடன் சந்தோஷ்குமார் குடும்பத்தினர் செயல்பட்டு உள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். இதே தொடர்ந்து சேலம் மருத்துவமனை நிர்வாகம் சார்பில் சந்தோஷ்குமார் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அவரது உடல் குடும்பத்தி னரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பல்வேறு நலத்திட்ட உதவிகள்

## தேனி மாவட்ட கலெக்டர் தகவல்



தேனி, மே. 23

தமிழ்நாட்டில் உள்ள சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த நபர்களின் சமூக, பொருளாதார, மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை (10ஆம் வகுப்பு முதல் ஐ.டி.ஐ பாலிடெக்னிக் படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்டபடிப்பு), முதியோர் ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை, கண் கண்ணாடி உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, திருமண உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நேர்வில் 01.04.2026 முதல் சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் பரிந்துரை செய்தல் ஆகியவற்றை இணையவழி மூலம் நடைமுறைப்படுத்தும் பொருட்டு தமிழக மின் ஆளுமை முகமை மூலம் இணையவழி சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவேஇனிவரும்காலங்களில்18வயதுபூர்த்தியடைந்த 60 வயதிற்குட்பட்ட சீர்மரபினர் இனத்தை சார்ந்தவர்கள் நலவாரியத்தில் புதியதாக உறுப்பினராக பதிவு செய்வதற்கும், ஏற்கனவே பதிவு பெற்ற உறுப்பினர்கள் தங்களது பதிவினை புதுப்பிப்பதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும் https;//www.dncwb.tn.gov.in/ என்ற இணையதளத்தில் சென்று தங்கள் கைப்பேசி எண் மூலம் உள்நுழைந்து உறுப்பினர் சேர்க்கை / நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தகுந்த சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் மனுதாரர்கள் இ சேவை மூலமாக இணையவழியில் விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரியில்

# தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்



கன்னியாகுமரி, மே.23

கன்னியாகுமரி நகராட்சி ஆணையாளர் பட்டுசாமி தலைமையில் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஷேக் அப்துல்காதர், சுகாதார ஆய்வாளர் அந்தோணி,சுகாதார மேற்பார்வையாளர்பிரதீஷ் ஆகியோர்கடற்கரைசாலை, ரதவீதி, கோவளம் ரோடு, சன்னதி தெரு போன்ற பகுதிகளில் உள்ள கடைகளில் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது சில கடைகளில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த கடைகளில் மொத்தம் 7 கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டன. பிளாஸ்டிக் பைகள் வைத்திருந்த கடை உரிமையாளர்களுக்கு மொத்தமாக ரூ.4 ஆயிரத்து 500 அபராதம் விதிக்கப்பட்டது.

இதுபோன்று தொடர்ந்து கடைகளில் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தினால், அந்த கடைகள் சீல் வைக்கப்படும் என்று நகராட்சி ஆணையாளர் கடை உரிமையாளர்களை எச்சரித்துள்ளார்.

### திருச்சி அருகே

# கோர விபத்தில் இளைஞர் பலி



திருச்சி, மே. 23

திருச்சி வேலக்குறிச்சியைச் சேர்ந்த சக்திவேல், நேற்று (மே 20) இரவு மனைவி செல்வி மற்றும் ஆறு மாத கைக் குழந்தையுடன் பைக்கில் திருச்சிமதுரை தேசிய நெடுஞ் சாலையில் வந்துள்ளார். அப்போது கார் மோதி ஏற்பட்ட விபத்தில் மூவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர். அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதில், சக்திவேல் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### மணப்பாறை அருகே

# விபத்தில் உருக்குலைந்து போன லாரி



திருச்சி, மே. 23

மணப்பாறை அருகே திருச்சிமதுரை தேசிய நெடுஞ்சாலையில், சென்னை நோக்கிச் சென்ற ஆம்னி பஸ் பஞ்சரானதால் நின்றபோது, சென்னைக்கு பார்சல் ஏற்றிச் சென்ற லாரி அதன் பின்பக்கத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் லாரியின் முன்பக்கம் அப்பளம் போல் நொறுங்கியது. தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து லாரியில் சிக்கிய ஓட்டுநரை மீட்டனர். துவரங்குறிச்சி போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### தஞ்சாவூர் மாவட்டம் சாதனை

# எஸ் எஸ் எல் சி பொது தேர்வில் மாநில அளவில் 3 ஆம் இடத்திற்கு முன்னேற்றம்

தஞ்சாவூர் மே 23

எஸ் எஸ் எல் சி பொது தேர்வில்மாநில அளவில் மூன்றாம் இடம் இடத்திற்கு முன்னேறி தஞ்சாவூர் மாவட்டம் சாதனை படைத்துள்ளது

தேர்ச்சி தரவரிசை பட்டியலில் தஞ்சாவூர் மாவட்டம் இதற்கு முன்பு வரை முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

கடந்த 2024ஆம் ஆண்டு மாநில அளவில்15வது இடமும்,2025 ஆம் ஆண்டு 12 வது இடத்திற்கு முன்னேறிய நிலையில், தற்போது 3வது இடத்தை எட்டிப் பிடித்துள்ளது

இந்த சாதனையை படைத்தது எப்படி என்பது குறித்து கல்வித் துறை அலுவலர்கள் தெரிவித்த தாவது:

கடந்த ஆண்டு ஜூலை மாதத் தில் பாட வாரியாக ஆசிரியர்க ளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் எந்தெந்த பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் குறைந்திருக்கி றது என்பதை கண்டறிந்து தொடர் புடைய பள்ளி ஆசிரியர்களுக்கு தேர்ச்சி விகிதத்தை எப்படி அதிகப் படுத்துவது என்பது குறித்து அறிவு ரைகள் ஆலோசனைகள் வழங்கப்பட்டன .மேலும் 100 சதவீத தேர்ச்சி பெற வைத்த ஆசிரியர்களுக்கும் தங்களுடைய அனுபவங்களையும் பகிர்ந்தனர். இந்த பயிற்சியில் ஏறத்தாழ 3 ஆயிரம் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் மாதம்தோறும் தலைமை ஆசிரியர்களை அனைத்து கூட்டம் நடத்தி, ஆலோசனை களை வழங்கி ஊக்கப்படுத்தினார். ஒவ்வொரு தேர்வு முடிவிலும், இணை இயக்குனர் சுவாமிநாதன் காணொளி மூலம் ஆய்வு நடத்திய ஆலோசனை களை வழங்கி ஊக்கப்படுத்தி வந்தார்.

கடந்த ஆண்டு தேர்ச்சி விகிதம் குறைவாக இருந்த பள்ளிகளுக்கு முதன்மை கல்வி அலுவலர், மாவட் ட கல்வி அலுவலர்கள் ஆகியோர் அவ்வப்போது சென்று ஆசிரியர் களை ஊக்கப்படுத்தினர். ஒரு நாளைக்கு 10 பள்ளிகள் வீதம் சென்று பாட வாரியாக தேர்ச்சி விகிதத்தை அறிந்து, தேர்ச்சி மேம்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என அறிவுரைகள் வழங்கினோம்.

பள்ளிகளில் இடைநிற்றல் மாண வர்கள், நீண்ட விடுப்பு எடுக்கும் மாணவர்களை தொடர்புடைய பள்ளி தலைமை ஆசிரியர்கள் அவருடைய வீட்டுக்கு தேடி சென்று அழைத்து வந்து படிக்க வைத்தனர்.

இந்த நடவடிக்கைகளே பொதுத் தேர்வில் மாநில அளவில் 3 ஆம் இடம் பெற்றதற்கு காரணம் ,மேலும் இன்னும் 40 மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தால், முதலிடத்தை பிடித்திருப்போம் என்றாலும் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து கடைபிடித்து, அடுத்த ஆண்டு மாநில அளவில் முதல் இடத்தை பிடிப்போ ம் என்றனர், கல்வித் துறை அலுவலர்கள்.

இதையடுத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலத்துக்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் சென்று, முதன்மை கல்வி அலுவல ர் பேபி ,மாவட்ட கல்வி அலுவலர் உள்ளிட்டோரை பாராட்டினார். இதேபோல பிளஸ் 2 பொதுத் தேர்வு கடந்த ஆண்டு மாநில அள வில் தஞ்சாவூர் மாவட்டம் 13வது இடம் பிடித்த நிலையில் நிகழா ண்டில் 7வது இடத்தை பிடித்த நிலையில் முன்னேறியது குறிப்பிட த்தக்கது. தஞ்சாவூர் மாவட்டத் தில்97.41 சதவீதத் தேர்ச்சியுடன் மாநில அளவில் 3ம் இடத்தை பிடித்துள்ளது

மாவட்டத்தில்408பள்ளிகளைச் சேர்ந்த 29,618மாணவ மாணவிகள் எஸ்எஸ்எல்சி பொது தேர்வு எழுதினர். இவர்களில் 28,851 பேர் தேர்ச்சி பெற்ற னர்.இது கடந்த ஆண்டு விட 1.84 சதவீதம் கூடுதல் ஆகும். கடந்தாண்டு மாநிலத்தில்12ஆம்இடத்தை பெற்றிரு ந்த நிலையில் நிகழாண்டில் 3வது இடத்திற்கு முன்னே றி உள்ளது, குறிப்பிடத்தக்கது

தஞ்சாவூர் மாவட்ட த்தில் தேர்வு எழுதிய 14,621 மாணவர் களில், 14,076 பேரும், 14,997 மாணவிகளில் 14,775 பேரும் தேர்ச்சி பெற்றனர். அதாவது, மாணவர்களின் 96.27சதவீதம் பேரும், மாணவிகளில்98.52சதவீத பேரும் தேர்ச்சி அடைந்தனர்.

அரசு பள்ளி அள வில் மாவட்டத்தில் 228 பள்ளிகளில் எஸ்எஸ்எல்சி தேர்வு எழுதிய மாணவ மாணவிகளில் 96.89 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றனர். இவர்க ளில் மாணவர்கள் 95.73 சதவீதம் பேரும் மாணவிகள் 97.90 சதவீதம் பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதன் மூலம் அரசு பள்ளிகளிலும் மாநில அளவில் தஞ்சாவூர் மாவட்டம் கடந்த ஆண்டு 12வது இடத்தில் இருந்த நிலையில் தற்போது 3வது இடத்திற்கு முன்னே றி உள்ளது.

மாவட்டத்தில் 116 அரசு பள்ளிகள் உட்பட மொத்தம் 230 பள்ளிகள் 100 சதவீதம்தேர்ச்சிபெற்றன.சமூகபாதுகாப்பு துறை ,சமூக நலத் துறை பள்ளிகள், இதர பள்ளிகளில் 100 சதவீதமும் , பள்ளி கல்வித்துறை சார்ந்த சுயநிதி பள்ளிகளில் 98.71சதவீதமும்,சுயநிதிமெட்ரிகுலேஷன் பள்ளியில் 98.51 சதவீதமும், பகுதி உதவி பெறும் பள்ளி களில் 98.35 சதவீதமும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 97.42 சதவீதமும், மாநில கல்வித்துறை பள்ளிகளில் 96.99 சதவீத மும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 96.1 சதவீதமும், நகராட்சி பள்ளிக ளில் 89.66 சதவீதமும் மாநகராட்சி பள்ளி களில் 89.41 சதவீதமும் தேர்ச்சி பெற்ற னர்.

மொழி பாடத்தில் 99.32 சதவீதம் பேரும் ஆங்கிலத்தில்99.68பெரும், கணிதத்தில் 98.67 சதவீதம் பேரும் அறிவியலில் 99.58 சதவீத பேரும் சமூக அறிவியலில் 99.30 சதவீத பேரும், விருப்பமொழி பாடத் திட்டத்தில் 96.99 சதவீத பேரும் தேர்ச்சி பெற்றனர்.




கோவை சிவானந்தா காலனி பகுதியில் ராஜீவ் காந்தியின் 35 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



தேனி மாவட்டம், அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுகாதார வசதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் (20.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது மருத்துவமனையின் தூய்மை, நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள், குடிநீர், கழிப்பறை பராமரிப்பு, மருத்துவ சேவைகள் வழங்கும் நிலைஉள்ளிட்டஅம்சங்கள்குறித்துஅதிகாரிகளிடம்கேட்டறிந்தார்.மேலும்,நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்களின் குறைகளை கவனமாக கேட்டுக்கொண்டு, சுகாதார வசதிகளை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# ₹149 மாத சந்தா விலையில் தமிழ் மொழி சேனல்களை வழங்கும் டிஷ் டிவி




சென்னை, மே 23

தென்னிந்தியாவிற்கு டிஷ் டிவி இந்தியா நிறுவனம் மேம்பட்ட சேவையை வழங்குவதாக அறிவித்துள்ளது. அதன்படி பிராந்திய மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மலிவான விலையில் குடும்பங்களுக்கும், தொலைக்காட்சி காணும் தினசரி அனுபவத்தை தடையின்றி வழங்குகிறது.

நுகர்வோரின் மாறிவரும் எதிர்ப்பார்ப்புக்கு ஏற்ப புதிய சலுகையின் கீழ் மாதத்திற்கு ₹149இல் ஆரம்பமாகும் பிராந்திய மொழியை முதன்மையாகக் கொண்ட பேக்குகளை அறிமுகப்படுத்துகிறது. இது தென்னிந்திய நேயர்களுக்காக தேர்வு செய்யப்பட்ட சிறப்பு பொழுதுபோக்கு, திரைப்படங்கள், பிராந்திய நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதே போன்று தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிக்கும் இது பொருந்தும்.

இது குறித்து டிஷ் டிவி இந்தியா நிறுவனத்தின், தலைமை செயல் அலுவலர், மற்றும் நிர்வாக இயக்குனர் மனோஜ் தோபல் கூறுகையில், "தென்னிந்தியா எப்போதுமே டிஷ் டிவிக்கு மிக முக்கியமான சந்தையாக இருந்து வருகிறது. புள்ளி விவர கணக்கின் படி தென்னிந்தியாவில் பிராந்திய மொழி சேனல்களே அதிக தேர்வாயிருக்கிறது. தென்னிந்திய மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யவே முக்கியத்துவம் தருகிறோம். மேலும் ரீசார்ஜ் செய்வதில் தாமதம், அல்லது தற்காலிக தடைகள் காரணமாக தவறவிட்ட நிகழ்ச்சிகள் குறித்து கவலைப் படாமல் பொழுதுபோக்கை எளிமையாகவும், தடையற்றதாகவும் வழங்குகிறோம் . மேலும் ஒவ்வொரு மொழித் தேர்வுக்கும் ₹50 மட்டுமே கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படும். விளையாட்டுச் சானல்களை எப்போதும் தடையின்றி கண்டு களிக்கலாம் என்றார்.

## திருப்பத்தூர் அடுத்த கெஜல் நாயக்கன்பட்டி ஜோதி உயர்நிலைப் பள்ளி

# 10ம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை



திருப்பத்தூர்:மே:23

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட கெஜல்நாயக்கன்பட்டி ஜோதி உயர்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். முதலாமிடம் வைத்தீஸ்வரன் 474 , இரண்டாம் இடம் சுனில் பாரதி 472 மூன்றாம் இடம் ஜோபியா ஜோ 463 ஆகிய இடத்தினை பெற்றுள்ளனர். ஜோதி கல்வி அறக்கட்டளையின் தலை வர் அன்பழகன், செயலாளர் கோவிந்தராஜ், பொருளாளர் மஞ்சுநாதன்,

ஜோதி கல்வி அறக்கட்டளை உறுப்பினர் கோபிநாதன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் சுகுமார் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர். அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பூர் இந்தியமுஸ்லிம் லீக் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



திருப்பூர்:மே23

தமிழக அரசியல் வரலாற்றில் முதல் முறையாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் ஆடுதுறை ஏ.எம் ஷாஜகான் முதலமைச்சர் விஜய் தலைமையி லான தவெக அரசில் இன்று அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனைக் கொண்டாடும் விதத்தில் திருப்பூர் வடக்கு மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் மாவட்டத் தலைவர் என். சையது முஸ்தபா தலைமையில் திருப்பூர் பெரிய கடை வீதி மாவட்ட தலைமை அலுவலகம் முன்பு இன்று ஜும்மா தொழுகை முடிந்து வந்தவர்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

நிகழ்வில் சுதந்திர தொழிலாளர் யூனியன் மாநில செயலாளர் எம் ஹபீபுர் ரஹ்மான். முஸ்லிம் லீக் மாவட்ட துணைத் தலைவர் மௌலவி அப்துல் கலாம் ஆசாத் சிராஜ் ஹஜரத் தெற்கு தொகுதி செயலாளர் முகமது அய்யூப் STU மாவட்ட பொருளாளர் ராஜா முஹம்மது ஹவுசிங் யூனிட் ஷேக் அப்துல்லா யூத் லீக் முஜிபுர் ரஹ்மான் 45வது வார்டு பிரைமரி குடைகாரர் ஹபீபுர் ரஹ்மான் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் அனைத்து இஸ்லாமியஜமாத்கூட்டமைப்புமுன்னால் பொதுச் செயலாளர் முகமது யாசர் பெரிய பள்ளிவாசல் முன்னாள் தலைவர் ஹாஜி வி கே எம் ஷாஜகான் தமிழக வெற்றி கழக மாவட்ட துணை செயலாளர் குத்புதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் ஆயிரக்கணக்கானோருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

## ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



ஈரோடு மே 23

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 797.95 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 23.05.2026 முடிய 107.62 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 58.62 அடியாகவும். 6.82 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப் பட்டுள்ளன. மேலும், பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் அனைவரும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே. பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் எண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், பி.எம்.கிசான் கணக்குடன் நிலம் தொடர்பான விபரங்களை இணைத்தல், ஆதார் விபரங்களை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் தங்களது அடையாளத்தை இணைய வழியில் உறுதிபடுத்துதல் போன்ற விபரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளுமாறும் விவசாயிகள்கே ட்டுக்கொள்ளப்பட்டனர். விவசாயிகள்குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் விவசாயிகளிடமிருந்து 83 கோரிக்கை மனுக்கள் பெற்று மேல் நடவடிக்கைகாக உரிய அலுவலர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன். ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் கலைச்செல்வி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் கந்தராஜா, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர். வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறையின் உதவி செயற்பொறியாளர்கள் உட்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.விவசாயிகள் மற்றும் விவசாய சங்கபிரதிநிதிகள் திரளாக இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



## முதலுதவி சமூக நல அறக்கட்டளை சார்பில்

# பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினருக்கு வாழ்த்து

கோவை மே: 23

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பொள்ளாச்சி தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கே. நித்தியானந்தன் அவர்களை முதலுதவி சமூக நல அறக்கட்டளை சார்பில் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் அறக்கட்டளையின் நிறுவனர் முனைவர்.

அபு.இக்பால், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் காளிமுத்து இளைஞர் அணி செயலாளர் அப்பாஸ் மாநில நிர்வாகிகள் சந்தோஷ் மற்றும் ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சி பகுதியில் (21.05.2026) விடுபட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் ரூ.67 கோடி மதிப்பீட்டில் 53 கி.மீ. தூரத்திற்கு கழிவுநீர் குழாய் அமைத்தல், இயந்திரக் குழிகள் அமைத்தல், வீடுகளுக்கான கழிவுநீர் இணைப்புகள் அமைத்தல், மேலும் கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தேனி மாவட்டம், அரண்மனைப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்தும் வகையில் ரூ.2.45 இலட்சம்மதிப்பீட்டில்வகுப்பறைகட்டடசீரமைப்புப்பணிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளில் வகுப்பறை சுவர்கள் பழுது பார்க்குதல், தரைத்தளம் சீரமைத்தல், மழைநீர் ஒழுகலை தடுக்கும் பணிகள், மின்வசதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பணிகளை ரஞ்ஜீத்சிங் (21.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான கல்விச் சூழல் வழங்கப்படுகிறதா என்பது குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், மீதமுள்ள பணிகளை தரமாகவும் விரைவாகவும் நிறைவு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது பள்ளிக் கல்வித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளும் உடனிருந்தனர்.



## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 10,12 ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு உயர் கல்வி வழிகாட்டுதல் பயிற்சி; தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் கள் பங்கேற்பு

தஞ்சாவூர் மே 23

தஞ்சாவூர் மாவட்டம் சாஸ்த்ரா பல்கலைக்கழக கூட்ட அரங்கில் 10 வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவிகளின் உயர்கல்வி மேற்கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் உயர் கல்வி ஆசிரியர்களுக்கான வழிகாட்டு பயிற்சி நடைபெற்றது இதனை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்

இதில் அரசு பொது தேர்வு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி பயில எந்தெந்த துறை தேர்ந்தெடுக்கலாம் என்பது குறித் தும், அதற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டன. தொழில் பயிற்சி, பாலிடெக்னிக், பொறியியல் மற்றும் கலை கல்லூரிகளில் சேர்ந்து பயில்வத ற்கான ஆலோசனை அந்தந்த துறைகளைச் சேர்ந்த பேராசிரியர் களால் விளக்கப்பட்டது.

அரசு கல்வி நிறுவனத்தின் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள்

இந்த நிகழ்ச்சி யில் கலந்து கொண்டு தங்கள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள பாட பிரிவுகள் சார்ந்தும் அவற்றிற்கான வேலை வாய்ப்புகள் சார்ந்ததும் விரிவாக எடுத்துரைத்தனர். 10ம்வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்க ளுக்கும் உயிர் கல்வி நிறுவனங்களில் 100 சதவீதம் சேர்வதற்கான முயற்சி யாக இந்நிகழ்வு மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலுடன் நடத்தப் பட்டது.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பேபி, மாவட்ட கல்வி அலுவலர்கள் மாதவன், சுந்தர் ,அரசு கல்வி நிறுவனத்தினை சேர்ந்த பேராசிரி யர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி கொள்ளிடம்

# ரயில்வே பாலம் அருகே முதியவர் சடலம்

திருச்சி, மே. 23

திருச்சி கொள்ளிடம் ரயில்வே பாலம் அருகே உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட முதியவரின் உடல், பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் ஸ்ரீரங்கம் தீரன் நகர் பகுதியைச் சேர்ந்த ஆண்டனி அரவிந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இது குறித்து கொள்ளிடம் போலீசார் அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மணப்பாறை விஏஓ அலுவலகத்தில்

# மேற்கூரை இடிந்து விழுந்து விபத்து



திருச்சி, மே. 23

திருச்சி மாவட்டம் மணப்பாறையை அடுத்த சந்தைபேட்டையில் உள்ள அணியாப்பூர் கிராம நிர்வாக அலுவலரின்அலுவலகக்கட்டிடம், 2007-08 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த இந்தக் கட்டிடத்தின் மேற்கூரை பூச்சு திடீரென இடிந்து விழுந்தது. கிராம நிர்வாக அலுவலர் அறையில் பொதுமக்கள் இல்லாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், வருவாய்த்துறை வட்டாட்சியருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் உள் வட்டம் சித்தேரி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சியர் சதீஷ் பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## துறையூர் அருகே

# பூட்டி இருந்த வீட்டில் 3 சவரன் நகை திருட்டு

திருச்சி, மே. 23

துறையூர் அருகே ஈச்சம்பட்டி கிராமத்தில் கோவிந்தராஜ் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றார். அவரது மகன் வந்து பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த மூன்று சவரன் தங்க நகைகள் மற்றும் 5000 ரூபாய் ரொக்கம் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து உப்பிலியபுரம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## லால்குடி அருகே

# மேல் மாடியில் இருந்து விழுந்து கொத்தனார் சாவு

கரூர், மே. 23

கரூர் மாவட்டம் பிச்சம்பட்டி பகுதியைச் சேர்ந்த செல்வராஜ், லால்குடி அருகே ட வளவனூரில் புதிதாக கட்டப்படும் வீட்டில் கொத்தனாராகப் பணிபுரிந்து வந்தார். நேற்று முன்தினம் இரவு, சுற்றுச்சுவர் அமைக்கப்படாத வீட்டின் மேல் மாடியில் உறங்கிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக கீழே விழுந்து தலையில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். லால்குடி போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சுசீந்திரம் அருகே

# கஞ்சா மறைத்து வைத்திருந்த வாலிபர் ஒருவர் கைது

சுசீந்திரம்.மே23

சுசீந்திரம் அருகே உள்ள தெங்கம்புதூர் பகுதியில் சுசீந்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுரேஷ் ரோந்து பணி மேற்கொள்ளும் போது சந்தேகப்படும்படியாக ஒரு நபர் சுற்றி திரிந்துள்ளார் அவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் தெங்கம்புதூர் பகுதியில் உள்ளகாந்திநகர் பகுதியைச் சார்ந்த ஷேக் முகமது சமில் 19 என்பதும் அவர் யாரோ அடையாளம் தெரியாத ஒருவரிடம் 40 கிராம் கஞ்சாவை வாங்கி மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தது

அதன்பேரில் அவரை கைது செய்து சுசீந்திரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



# சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைபதியில் வைகாசி திருவிழா தொடங்கியது

தென்தாமரைகுளம்., மே.. 23

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைபதியில் வைகாசி திருவிழா நேற்று (வெள்ளிக்கிழமை ) கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா வருகிற ஜூன் 1ம் தேதி வரை 11நாட்கள் நடைபெறுகிறது. இதையொட்டி நேற்று வெள்ளிகிழமை அதிகாலை 05.30 மணி அளவில் கொடி ஏற்றுதல் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்ச்சிக்குகுருபையன்காமராஜ்தலைமை தாங்கினார். குருமார்கள் பால் பையன்,பையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். குருபையன்ராஜாகொடியேற்றி வைத்தார்.

பின்னர், பணிவிடையும், தர்மங்களும், வாகன பவனியும் நடைபெற்றது. மதியம் 12 மணிக்கு அன்னதர்மம் நடைபெற்றது. மாலையில் பணிவிடையும் இரவு அய்யா தொட்டில் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வருதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பணிவிடையை குருமார்கள் பையன்ஸ்ரீராம், பையன் சிவராஜ், பையன் பொன்ராஜ்,ஸ்ரீராம பையன் ஆகியோர் செய்தனர்.

விழாவின் இரண்டாம் நாளான இன்று முதல் 23ம் தேதி 7ம்நாளான 28ம் தேதி வரை தினமும் பணிவிடையும், அன்னதர்மமும், வாகன பவனியும் நடைபெறுகிறது.

8ம் நாள் விழாவான 29ம் தேதி அய்யா குதிரை வாகனத்தில் எழுந்தருளி சாமிதோப்பு. முத்திரி கிணறு சமீபம் கலி வேட்டையாடுதல் நிகழ்வு நடக்கிறது. அதன் பிறகு அய்யா குதிரை வாகனத்தில் செட்டிவிளை, சாஸ்தான்கோவில்விளை, சோட்டப்பணிக்கன் தேரிவிளை, காமராஜபுரம் வழியாக சாமிதோப்பு வந்தடைகிறார்.30ம் தேதி அய்யா அனுமார் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் 31ம் தேதி இரவு 12 மணி அளவில் அய்யா இந்திர விமானம் வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. திருவிழாவின் 11ம் நாளான ஜூன் 1ம் தேதி பகல் 12 மணிக்கு அய்யா பல்லாக்கில் பஞ்சவர்ண தேருக்கு எழுந்தருளி தேரோட்டம் நடக்கிறது விழா ஏற்பாடுகளை தலைமை பதி நிரவாகிகள் செய்து வருகின்றனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன்,மாவட்டவருவாய்அலுவலர்.அ.சாதனைக்குறள்,இணைஇயக்குநர்வேளாண்மை .காளிமுத்து, துணை இயக்குநர் தோட்டக்கலை .குணவதி, செயற்பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை .நிர்மலதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் வேளாண்மை .ஏஞ்சலின் பொன்ராணி மற்றும் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் உள்ளனர்

# மணப்பாறை: தவறவிட்ட மணி பர்ஸை உரியவரிடம் ஒப்படைத்த நடத்துனர்

திருச்சி, மே. 23

மணப்பாறை நடுப்பட்டி பகுதியைச் சேர்ந்த தமிழ் என்பவர் திருச்சி சென்று இறங்கியபோது தனது பணப்பையை பேருந்தில் தவறவிட்டுள்ளார்.

அவர் சென்னை சென்ற பிறகு, பேருந்து நடத்துனர் சிவகுமார் அவரைத் தொடர்பு கொண்டு பணப்பை பேருந்தில் இருப்பதை தெரிவித்துள்ளார். தமிழ் தனது பணப்பையையும் ஆவணங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

இதற்காக, அவர் நடத்துனர் மற்றும் ஓட்டுநருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த சம்பவம் நேர்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

## கிருஷ்ணகிரியில் நடைப்பெற்ற

# தமிழக விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகளின் உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம்

கிருஷ்ணகிரி:மே. 23.



கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள தமிழக விவசாயிகள் சங்க அலுவலகத்தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகளின் உயர் மட்ட ஆலேசானை கூட்டம் நடத்தப்பட்டது, சங்கத்தின் ஆலோசகர் கண்ணையா தலைமையில் நடைப்பெற்றக் கூட்டத்திற்கு சங்கத்தின் பெருளாளர் சுப்பிரமணி ரெட்டி, வரதராஜ், கண்ணப்பன் சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு வருகைதந்த விவசாயிகளை மாவட்ட பொதுச் செயலாளர் அனுமத்தராஜ் வரவேற்று பேசினார் மேலும் இந்த கூடத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் இராமகவுண்டர் கலந்துக் கொண்டு புதியதாக ஆட்சி அமைத்துள்ள தமிழக அரசு சிறு,குறு விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடி செய்யட்டும் என்று அறிந்த தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைவர் வருகின்ற ஜீலை 5ம் தேதி நடைப்பெற உள்ள உழவர் தினப் பேரணியை கிருஷ்ணகிரியில் நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்த அவர் கிருஷ்ணகிரி மாவட்டதில் தீடிரென வீசிய சூறைக் காற்றினால் அறுவடைக்கு தயரான மாங்காய்கள் உதிர்ந்து நாசமானதால் அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ, 30 ஆயிரம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார் மேலும் யானை, காட்டுப்பன்றி களைத்தொடர்ந்து மயில்களின் தொல்லை அதிகரித்து உள்ளதல் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி இருப்பதால் அதற்கான இழப்பீடு தொகையினை வழங்கி மயில்களை கட்டுப்படுத்த வேண்டும் , தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணி ஓட்டு, அலியாளம், எண்ணேக்கொல் ஆகிய இடங்களில் தடுப்பு அணைகளை கட்ட அதற்கான நிதியை ஓதிக்கீடு செய்து அனைத்து ஏரிகளுக்கும் தண்ணி கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும், அப்போது விவசாய சங்கதினை சேர்ந்த நாகராஜ்,ரவி, செல்வராஜ், முனிரத்தினம், சின்னசாமி, மரஞ்சித்குமார், செல்வராஜ், முனுசாமி, பாலாஜி, பாஸ்கர், முத்து, சக்திவேல், திம்மராயன், ராஜீவ் காந்தி, நாராயணன், ராஜா, மாரியப்பன், கோவிந்தராஜ், சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமான விவசாய கலந்து கொண்டனர்

## இரணியல் அருகே

# விபத்தில் சிக்கிய வாலிபர் உயிரிழப்பு



இரணியல், மே.23

இரணியல் அருகே உள்ள மேலகட்டிமாங்கோடு என்ற இடத்தை சேர்ந்தவர் கணேசன் மகன் ஆனந்த் (22). இவர் ஆன்லைன் புக்கிங் டெலிவரி நிறுவனத்தில் மோட்டார் சைக்கிள் விநியோகம் செய்யும் வேலை செய்து வந்தார்.

இவர் கடந்த 11ம் தேதி பேயன்குழி சாலையில் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே அதிக வேகத்தில் வந்த உயர்தர மோட்டார் சைக்கிள் ஆனந்த் பைக் மீது பயங்கரமாக மோதியது. இதில் பலத்த காயமடைந்த ஆனந்த் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆசாரிப்பள்ளம் அரசுமருத்துவக்கல்லூரிமருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை ஆனந்த் பரிதாபமாக இறந்தார். இது குறித்து இரணியல் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆரல்வாய்மொழி சோதனை

# சாவடியை முற்றுகையிட்ட கனிம வள கடத்தல் கும்பல் மீது போலீசார் வழக்கு பதிவு

நாகர்கோவில், மே.23

கன்னியாகுமரி மாவட்டம் வழியே கேரளாவுக்கு பெருமளவு கனிமவள கடத்தல் நடந்து வந்தது. கனிமவள கடத்தல் வாகனங்கள் மோதி பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டு வந்தது. பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தும் கனிமவள வாகனங்கள் குமரி மாவட்ட மக்களுக்கு எமனாகவே மாறி வந்தது. இதைக்கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் குறுக்கு வழியில் கனிமவள கடத்தல் தொடர்ந்து வந்தது.

இதனால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கடத்தல் லாரிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தார். அதன் மூலம் குமரி மாவட்டத்தில் விபத்துக்கள் இல்லா குமரி மாவட்டமாக மாறி, உயிரிழப்புகளும் குறைந்தது.

இந்நிலையில் கனிம வள கடத்தல் கும்பல்கள் ஆரல்வாய்மொழி சோதனை சாவடியை முற்றுகையிட்டு கனிம வளம் கடத்த அனுமதி கேட்டு, அங்கிருந்த போலீசாரிடம் வாக்குவாதம் செய்து உள்ளனர். இதுகுறித்த வீடியோ வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவர்கள்மீதுமாவட்டகாவல்கண்காணிப்பாளர்உத்தரவின் பேரில் தற்போது வழக்கு பதிவு செய்யப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. காவல் நிலையத்தில் ஆபாசமாக பேசுதல் போலீசாரை பணி செய்ய விடாமல் தடுத்தல் மற்றும் 7 ஆண்டுகள் வரை தண்டனை பெறும் கொலை மிரட்டல் உட்பட பல்வேறு சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கல்குவாரிகளில் உரிய காலத்தில் ஆய்வு செய்யாத அதிகாரிகள் மீதும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக கூறப்படுவதால் கனிமவள கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரைவில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிகிறது.

## காட்டுப்புத்தூர்:

# கால்வாயில் அடையாளம் தெரியாத மூதாட்டி சடலம்

திருச்சி, மே. 23

திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் அருகே காடுவெட்டி மனபோக்கி கால்வாயில் சுமார் 80 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத மூதாட்டியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலர் கலைவாணி அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார், உடலை மீட்டு கரூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

உயிரிழந்த மூதாட்டி யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## துறையூர் அருகே

# கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞர்



திருச்சி, மே. 23

துறையூர் அருகே சிக்கத்தம்பூர் பாளையத்தைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் தேவராஜ் (26)நேற்றுமதியம்வீட்டிலிருந்துவெளியேசென்றவர் வீடு திரும்பாததால், அவரது தாய் தேடியபோது கிணற்றில் செருப்பு மட்டும் கண்டெடுக்கப்பட்டது.

இதுகுறித்து துறையூர் தீயணைப்புத் துறைக்கு தகவல் அளிக்கப்பட்டதையடுத்து, தீயணைப்பு வீரர்கள் இரண்டு மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு கிணற்றில் இருந்து தேவராஜனின் சடலத்தை மீட்டனர்.



## தென்மேற்கு பருவமழையால் பாதிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும்

# பொது மக்களை பாது காப்பாக தங்க வைக்க 277 முகாம்கள் தயார்; மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தகவல்

தஞ்சாவூர் மே 23

தென்மேற்கு பருவ மழையால் பாதிக்கப்படும் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களை பாது காப்பாக தங்க வைக்க 277 முகாம்கள் தயார் நிலையில் உள்ளன என்று மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் கூறினார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தென் மேற்கு பருவமழை முன்னெச்சரிக் கை நடவடிக்கை தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களு டன் ஆய்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமை தாங்கி, பேசியதாவது:

கலெக்டர் அலுவலகம், அனைத்து வருவாய் கோட்ட அலுவலங்கள் ,தாசில்தார் அலுவல கங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்க வேண்டும். மழையால் பாதிப்புகள் ஏற்படக்கூடிய 195 கிராமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 300 ஆப்தமித்ரா தன்னார்வலர்கள், 4500 முதல் நிலை பொறுப்பாளர்களும், ஒரு பல் நோக்கு புயல் பாதுகாப்பு மையத்திற்கு 50 முதல் நிலை பணி யாளர்கள் வீதம் 14 பல் நோக்கு மையத்திற்கு 700 முதல் நிலை பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்

பாதிப்புகள் ஏற்படக்கூடிய பகுதிகளில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு 277 நிவாரண மையங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பருவமழையின் போது வெள்ள நீர் தேங்காதவாறு 10,418 சிறு பாலங் கள் மற்றும் 878 பாலங்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. ஆறுகள் மற்றும் கால்வாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்வதற்கு ஏதுவாக 534 இடங்களில், 1 லட்சத்து 210 மணல் முட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி தியாகராஜன், நுகர்பொருள் வாணிபக் கழகம் முதுநிலை மண்டல மேலாளர் செல்வம், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி இராமன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகனேஷ் ,வேளாண்மை இணை இயக்குனர் வித்யா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் தவச்செல்வ ன் ,மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்



# காவேரி வழக்கின் தீர்ப்பை செயல்படுத்த த.வெ.க. அரசில் நடவடிக்கை தேவை: காவிரி உரிமை மீட்பு குழு வலியுறுத்தல்

தஞ்சாவூர் மே 23

காவிரி நதிநீர் வழக்கின் தீர்ப்பை செயல்படுத்த கடந்த காலத்தில் முயற்சி செய்யப்படாத நிலையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள த. வே.க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவேரி உரிமை மீட்பு குழு வலியுறுத்தியுள்ளது. தஞ்சாவூரில் காவேரி உரிமை மீட்பு குழு கூட்டம் நடைபெற்றது இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து செய்தியாளர்களிடம் அக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் பெ மணியரசன் தெரிவித்ததாவது :

காவிரி நிதி நீர் வழக்கில் 2018 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கர்நாடக அரசு ஒருபோதும் செயல்படுத்தியது இல்லை தீர்ப்பை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு ஆட்சியாளர்கள் தொடர் முயற்சியிலேயே உரையாட நடவடிக்கை இது வரை எடுக்கவில்லை புதிதாக பொறுப்பேற்றுள்ள முதல்வர் ஜோசப் விஜய் தலையில தலைமை இலான தமிழக அரசு காவிரி நதிநீர் பிரச்சினையில் உண்மையான அக்கறை காட்டி உச்சநீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

பெங்களூர் 20 26 மே 9ஆம் தேதி ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி கோபால் கவுர தலைமையில் கூடிய காவேரி குழு கூட்டத்தில் காவல்நீர் தமிழகத்திற்கு அதிக நேர் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதை எதிர்த்து உஜநீதிமன்றம் தாக்கல் மனு தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர் தமிழகத்தை புறக்கணிக்கவும் பழிவாங்கவும் கர்நாடகம் செயல்படுகிறது எனவே புதிய புதிதாக அமைக்க உள்ள முதல்வர் ஜோக் ஜோசப் விஜய் தலைமையிலான ஆட்சி இதைக் கவனித்துக் கொண்டு 2018 ஆம் ஆண்டு பூச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை செயல்படுத்த புதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் உச்சநீதிமன்றம் அணுக வேண்டும்

கூட்டத்தில் குழுவின் பொருளாளர் த மணிமொழியின் குழு நிர்வாகிகள் ஜெகதீசன் சாமி கரிகாலன் சீமியோன் சேவியர் ராஜ் கலைச்செல்வன் பொறியாளர் செந்தில் வேலன், வெள்ளாம் பெரம்பூர் துரை ரமேஷ், புண்ணியமூர்த்தி ,தனசேகரன், வை கறை ,பழ ராஜேந்திரன், விடுதலை சுடர் தென்னவன், திருச்சி கவித்துவன் வே.க .இலக்குவன் ,செம்மலர் தீந்தமிழன் ராமசாமி, ராசு, முணியாண்டி,மாரிமுத்து வல்லம் புதுர் பாலன், சுவாமிமலை திருஞானம் ,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில் விழா மர சிற்ப வாகனங்கள் சீரமைப்பு தீவிரம்



கன்னியாகுமரி, மே.23

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டு தோறும் வைகாசி மாதம் நடைபெறும் விசாக பெருந் திருவிழாவும், புரட்டாசி மாதம் நடைபெறும் நவராத்திரி திருவிழாவும் முக்கியமான திருவிழாக்கள் ஆகும். இந்த திருவிழாவில் 10 நாட்களும் பகவதி அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பவனி வருவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டு வைகாசி விசாக பெந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. திருவிழாவின்போது 1 ஆம் திருவிழா அன்று இரவு பூப்பந்தல் வாகனத்திலும், 2 ஆம் திருவிழா அன்று காலையில் பல்லக்கு வாகனத்திலும், இரவு கிளி வாகனத்திலும், 3ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு வேலைகளில் அன்ன வாகனத்திலும்,4ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு வெள்ளி காமதேனு வாகனத்திலும், 5 ஆம் திருவிழா அன்று காலை மற்றும் இரவு நேரத்தில் சிம்ம வாகனத்திலும், 6 ஆம் திருவிழா அன்று காலையில் யானை வாகனத்திலும், இரவு இந்திர வாகனத்திலும், 7 ஆம் திருவிழா அன்று காலையில் பல்லக்கிலும், இரவு வெள்ளி இமயகிரி வாகனத்திலும், 8 ஆம் திருவிழா அன்று இரவு பூப்பந்தல் வாகனத்திலும், நள்ளிரவு வெள்ளி குதிரை வாகனத்திலும், 9 ஆம் திருவிழா அன்று இரவு வெள்ளிக் கலைமான் வாகனத்திலும் அம்மன் எழுந்தருளி வீதி உலா வருவது வழக்கம்.

இதற்காக மொத்தம் 10 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் குதிரை, இமயகிரி, காமதேனு, கலைமான் ஆகிய 4 வாகனங்கள் வெள்ளி வாகனங்கள் ஆகும். மீதி உள்ள பூப்பந்தல், கிளி, அன்னம், யானை, சிங்கம், இந்திர வாகனம் ஆகிய 6 வாகனங்கள் மர சிற்பவாகனம் ஆகும் இதில் சேதமடைந்து இருந்த 6 மர சிற்ப வாகனங்களும் வைகாசி விசாக திருவிழாவையொட்டி சீரமைக்கப்பட்டு, வர்ணங்கள் தீட்டும் பணி நடந்து வருகிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.